செ. கு. எண்:304 நாள் :18.11.2013

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 18.11.2013

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், சந்தவேலூர் ''அ'' கிராமம், சென்னை – பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில், 16.10.2013 அன்று சென்னையிலிருந்து திருப்பத்தூர் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து லாரி மீது மோதியதில், பேருந்தில் பயணம் செய்த சென்னை, தேனாம்பேட்டையைச் சேர்ந்த திரு. சேகர் என்பவரின் மனைவி திருமதி கோமதி, வேலூர் மாவட்டம், துரைப்பாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. வேலுடையார் என்பவரின் மகன் சிவசங்கரன், வாலாஜாபேட்டை, பெரிய கரும்பூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமலிங்கம் என்பவரின் மகன் சதீஷ், கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூரைச் சேர்ந்த திரு. மாணிக்கம் என்பவரின் மகன் சிங்காரவேலன், வேலூர் மாவட்டம், வாணியம்பாடியைச் சேர்ந்த திரு. முருகன் என்பவரின் மகன் ராஜவேலு, சென்னை, காட்டுப்பாக்கத்தைச் சேர்ந்த திரு. பாலசுப்பிரமணியம் என்பவரின் மகன் அருணாசலம், ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்தில் ஒன்பது நபர்கள் காயமடைந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9